# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்)

**1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் 2025 மே மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

[7 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு: ரூபா 150.00**

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

ச.வ.ஒ-80/2024

## 1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினை நீக்குதல்*

**2.** 1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது..

*பேணல்கள்*

**3.** (இதனகத்துபின்னர், "வெளிநாட்டுக் கடன்கள் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தினை நீக்குவது எது எவ்வாறிருப்பினும் -

(அ) வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கையொப்பமிடப்பட்டதும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதுமான வெளிநாட்டுக் கடன் ஒன்று தொடர்பான ஒவ்வோர் உடன்படிக்கையும். வெளிநாட்டுக் கடன் ஒன்று தொடர்பான ஓர் உத்தரவாதமும் மற்றும் அத்தகைய உடன்படிக்கை அல்லது உத்தரவாதத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம், முறி, வாக்குறுதிப்பத்திரம் அல்லது வேறு ஆவணமும் 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நியதிகளின்படி இச்சட்டம் தொடங்கும் தேதி அன்றும் அதன்பின்னரும் பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்தின்கீழ் செல்லுபடியான முறையில் கையொப்பமிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

2-PL 15236 -280 (2025/05)

(ஆ) வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதுமான உடன்படிக்கை ஒன்றிற்கு அல்லது உத்தரவாதம் ஒன்றிற்கு பயன் கொடுப்பதற்கு ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கை அல்லது உத்தரவாதத்தின்கீழான கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றவரை இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும் அதன் பின்னரும் வலுவில் தொடர்ந்திருந்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.